முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 552**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

03.04.2021, சனிக்கிழமை

1. ஞானசக்தியே அரங்கா போற்றி
ஞானகீர்த்தியே தேசிகா போற்றி
ஞானபண்டிதன் என் சக்தியாய் வந்த
ஞானியே ஆறுமுக அரங்கனே போற்றி
2. போற்றியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
புகலுவேன் ஞான அறிவுரை ஆசி
ஆற்றல்கூட்டி உன்னை ஆறுமுகன் யான்
அற்புதம்பட கலியுகமாற்றம் வழி தூண்டிவர
3. வருகின்ற அரங்கன் உன் செயல்கள் மூலமே
வையகம் ஞானயுகமாற்றம் பெறும்
தருகின்ற உன் தர்மத்தின் மூலமே
தரணியில் உள்ள உயிர்களுக்கு பாதுகாப்பு கூடும்
4. கூடவே அரங்கனே பெருந்துணையாக
குவலயத்தில் ஆறுமுகன் யான் உடனிருந்து
அருந்தவசி உந்தன் சர்வசெயல்களிலும்
ஆற்றலாக ஆக்கமாக இணைந்துவர
5. வருகின்ற உன் சக்தி பரவிபரவி
வையகத்தில் உன்வழி தீட்சைபெற்றவர்க்கும்
முருகப்பெருமான் என் அருளும் தயவும் கூடி
முழுமைபட இந்த உலகம் ஞானவான்கள் நிறைந்த பூமியாக
6. ஆகியே ஆகவே மாறியே இனிதே
அற்புதங்கள் அரங்கன் உன் வழி நடந்தேறும்
யுகமாற்றம் செய்ய வந்த மாதவசி நீ
உன்தொண்டர்படை மூலம் இந்த அற்புதத்தை நடத்துவேன்
7. ஜெகத்தின் மகா குருநீ
சிவராஜ யோகி நீ
உந்தன் வழி வகைபட பேருலகம்
வள்ளல் நெறி தாங்கி இனி தர்மலோகமாகும்
8. ஆகுமப்பா ஆன்மீக ஞான பூமியாக
ஆளுமைகளும் ஞான ஆட்சியாக மாறி
மாறுதலைபெறும் ஆறுமுகன் என் தயவால்
மகத்துவம் உள்ள ஞானி உன் துணைபட

9. பெருமைமிக்க அரங்கன் சேவைக்குள்
பேருலகமே வந்து இயக்கம் காண
தர்மபூமியாக ஞான ஆட்சிக்காலமாக
தரணியே உருமாறி சிறப்புகாணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.